# TNPSC (தொகுதி–IV) ஒரிஜினல் வினாத்தாள்–2008
## (சர்வேயர் தேர்வு)

## பொது அறிவு

1. இரு எண்களின் விகிதம் 5 : 8. அவற்றின் கூடுதல் 39 எனில் அந்த எண்கள் யாவை?
   A) 10, 29 B) 19, 20
   C) 15, 24 D) 24, 15

2. ஒரு எண் மற்றும் அதனுடைய பெருக்கல் தலைகீழி ஆகியவற்றின் கூடுதல் $\frac{65}{8}$ எனில் அந்த எண்ணைக் கண்டுபிடி.
   A) 65 B) 8
   C) 50 D) 25

3. $A = \{a, b, c, d, e, f, g, h\}$; $B = \{a, b, e, f\}$ மற்றும் $C = \{a, c, e, g, h, k\}$ எனில் $A - (B \cup C)$ காண்க.
   A) $\{d\}$ B) $\{c\}$
   C) $\{b\}$ D) $\{a\}$

4. 5, 2 ஆகியவற்றை மூலங்களாகக் கொண்ட சமன்பாட்டை காண்க.
   A) $x^2 - 7x - 10 = 0$
   B) $x^2 - 7x + 10 = 0$
   C) $x^2 + 7x + 10 = 0$
   D) $x^2 + 7x - 10 = 0$

5. பின்வரும் அசமன்பாட்டை நிறைவு செய்யாத புள்ளி எது? $x - 2y \geq ?$
   A) (1, 2) B) (2, 3)
   C) (3, 1) D) (1, 3)

6. சீரான பகடை ஒன்று உருட்டப்படுகிறது. அதில் ஒற்றை எண் கிடைக்க நிகழ்தகவு யாது?
   A) $\frac{1}{2}$ B) $\frac{1}{3}$
   C) $\frac{1}{4}$ D) $\frac{1}{6}$

7. பின்வரும் தொடரின் கூட்டுப்பலன் காண்க :
   17 + 19 + 21 + ...... 30 உறுப்புகள் வரை
   A) 3017 B) 1380
   C) 1300 D) 3000

8. ஒரு உள்ளீடற்ற உருளையின் வெளி ஆரம் R. மற்றும் உள் ஆரம் r. எனில் அதன் அடிப்பக்கப் பரப்பு
   A) $\pi(R^2 - r^2)$ B) $2\pi h(R - r)$
   C) $2\pi r^2 R$ D) $\pi h(R^2 - r^2)$

9. ஒரு முக்கோணத்தின் இரண்டு பக்கங்கள் சமம் எனில், அவற்றுக்கு எதிரே உள்ள கோணங்கள்...............
   A) செங்கோணங்கள்
   B) சமம்
   C) சமமல்ல
   D) இவற்றுள் எதுவுமில்லை.

10. பின்வரும் பின்னங்களில் பெரிய பின்னம் எது?
    $\frac{3}{7}, \frac{3}{5}, \frac{4}{7}, \frac{5}{11}$
    A) $\frac{3}{7}$ B) $\frac{3}{5}$
    C) $\frac{4}{7}$ D) $\frac{5}{11}$

11. தமிழ்நாட்டில் ஆர்டீசியன் நீரூற்றுகள் காணப்படும் ஆற்றுப் பள்ளத்தாக்கு
    A) பாலாறு B) வெள்ளாறு
    C) செய்யாறு D) பெண்ணையாறு

12. மக்கட்தொகை புள்ளிவிவரம் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை கணக்கெடுக்கப்படுகிறது?
    A) 10 ஆண்டுகள் B) 20 ஆண்டுகள்
    C) 5 ஆண்டுகள் D) ஒரு வருடம்

13. வெள்ளை யானைகளின் நாடு
    A) தாய்லாந்து B) பின்லாந்து
    C) நார்வே D) கியூபா

14. ஆசிய வளர்ச்சி வங்கியின் தலைமை அலுவலகம் இருப்பது
    A) வாஷிங்டன் B) பாரீஸ்
    C) மணிலா D) கான்பெரா

15. மக்கள்தொகை மிக அடர்த்தியான மாநிலம்
    A) கேரளா B) உத்திரப்பிரதேசம்
    C) மேற்கு வங்காளம் D) பீஹார்

16. இந்தியாவின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கி
    A) யூனியன் வங்கி
    B) சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
    C) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
    D) இந்திய ரிசர்வ் வங்கி



www.recruitmentguru.com

17. இந்தியாவில் மிக கல்வி அறிவுள்ள யூனியன் பிரதேசம்
A) டில்லி B) புதுச்சேரி
C) சண்டிகர் D) இலட்சத் தீவு

18. செய்தித்தாள்கள் எந்த அரசின் கட்டுப்பாட்டில் வரும்?
A) மாநில அரசு B) மத்திய, மாநில அரசு
C) மத்திய அரசு
D) இவற்றுள் எதுவுமில்லை

19. 'பட்டிகணித சரா' என்ற இயற்கணித நூலை இயற்றியவர்
A) ஸ்ரீதரா B) பாஸ்கராச்சாரியா
C) பிரம்ம குப்தா D) நாராயணா

20. தமிழ்நாட்டில் பல்கலைக்கழகங்களின் வேந்தர் யார்?
A) தமிழக கவர்னர்
B) இந்திய குடியரசுத் தலைவர்
C) தமிழக முதலமைச்சர்
D) இந்திய பிரதம மந்திரி

21. 2004 –ல் ஏற்பட்ட சுனாமியால் மிக அதிக அளவில் பாதிக்கப்பட்டது
A) லிட்டில் அந்தமான் மற்றும் நிக்கோபார்
B) நாகப்பட்டினம்
C) சென்னை
D) ஸ்ரீலங்கா

22. குழி ஆடியின் வளைவுஆரம் 20 செ.மீ. எனில் அதன் குவிய தூரம் எவ்வளவு?
A) 5 செ.மீ B) 10 செ.மீ
C) 20 செ.மீ D) 40 செ.மீ

23. தீயணைக்கும் பொருளாக பயன்படுவது எது?
A) ஆக்ஸிஜன்
B) கார்பன் டை ஆக்ஸைடு
C) கார்பன் மோனாக்ஸைடு
D) நீர்வாயு

24. 2004 – 2005ம் ஆண்டில் மத்திய பெட்ரோலியத் துறை கேபினட் அமைச்சர் யார்?
A) தயாநிதி மாறன்
B) ராம்விலாஸ் பாஸ்வான்
C) ப. சிதம்பரம்
D) மணிசங்கர் அய்யர்

25. இந்திய அரசு எந்த இடத்திலுள்ள இந்திய கால்நடை மருத்துவ ஆராய்ச்சி கழகத்தில் கோழிப்பண்ணை ஆராய்ச்சிப் பிரிவை நிறுவியது?
A) டில்லி B) மும்பை
C) கொல்கத்தா D) இஜத் நகர்

26. பூமியில் உள்ள ஓசோன் படலம் எவ்வாறு உயிரினங்களுக்கு உதவுகிறது?
A) ஆக்ஸிஜனை வழங்குகிறது
B) நைட்ரஜன் சுழற்சியை கட்டுப்படுத்துகிறது
C) வெப்ப நிலையை கட்டுப்படுத்துகிறது
D) புறஊதா கதிர்களைக் கட்டுப்படுத்துகிறது

27. வெர்மிடெக் என்னும் வார்த்தையை உருவாக்கியவர்
A) முனைவர். சுல்தான் இஸ்மாயில்
B) முனைவர். அப்துல் இஸ்மாயில்
C) முனைவர். ஜெ.ஏ. போஸ்
D) முனைவர். எம்.எஸ். சுவாமிநாதன்

28. போலியோ வைரஸ் உடலில் நுழையும் வழி
A) கொசு கடிப்பதினால்
B) தெள்ளுப்பூச்சி கடிப்பதினால்
C) சுகாதாரமற்ற உணவு மற்றும் நீரினால்
D) உமிழ்நீர் மற்றும் மூக்கிலிருந்து ஒழுகும் பொருளினால்

29. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருந்தியுள்ளது?
A) பீஹார் – மும்பை
B) கர்நாடகம் – சென்னை
C) தமிழ்நாடு – ஹைதராபாத்
D) நாகலாந்து – கொஹிமா

30. பொன்னியின் செல்வன் என்ற வரலாற்று புதினத்தை எழுதியவர்
A) சாண்டில்யன் B) கல்கி
C) புலமைப்பித்தன் D) அகிலன்

31. எந்த ஆண்டு முஸ்லீம் லீக் நிறுவப்பெற்றது?
A) 1905 B) 1906
C) 1907 D) 1911

32. கி.பி. 1905–ல் வங்கப்பிரிவினைக்கு காரணமாக இருந்த அரசப்பிரதிநிதி
A) கர்சன் பிரபு
B) டல்ஹௌசி பிரபு
C) லிட்டன் பிரபு
D) வெல்லெஸ்லி பிரபு

33. 1929–ல் லாகூர் காங்கிரஸ் மாநாடு யார் தலைமையில் கூடியது?
A) காந்திஜி B) நேருஜி
C) நேதாஜி D) இராஜாஜி

34. வந்தே மாதரம் என்ற பாடல் இடம் பெற்ற நூல்
A) இந்திய மறுமலர்ச்சி
B) சத்திய சோதனை
C) ஜாதக கதைகள்
D) ஆனந்த மடம்

35. அகமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்தைத் தோற்றுவித்தவர்
A) காந்திஜி B) அரவிந்த கோஷ்
C) கோகலே D) திலகர்

36. இந்தியா சுதந்திரமடைந்தபோது இங்கிலாந்தின் பிரதம அமைச்சராக இருந்தவர் யார்?
A) சர்ச்சில் B) மௌண்ட்பேட்டன்
C) இர்வின் D) அட்லி

www.recruitmentguru.com

**37. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களை கவனிக்கவும்:**

I. மௌண்ட்பேட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர்.

II. சி. இராஜகோபாலாச்சாரி சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய தலைமை ஆளுநர்.

III. சி. இராஜகோபாலாச்சாரி சுதந்திர இந்தியாவின் கடைசி தலைமை ஆளுநர்.

IV. வல்லபாய் பட்டேல் தலைமை ஆளுநராக சி. இராஜாஜிக்குப் பின் நியமிக்கப்பட்டார்.

**இவற்றுள் :**

A) I மட்டும் சரியானது

B) I மற்றும் II சரியானவை

C) I, II மற்றும் III சரியானவை

D) அனைத்தும் சரியானவை

**38. வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர்**

A) கர்னல் நீல் B) டி.ஈ. ஆஷ்

C) ஹென்றி லாரன்ஸ் D) நிக்கல்சன்

**39. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்**

A) திருப்பத்தூர் B) கயத்தாறு

C) புதுக்கோட்டை D) கோலார்பட்டி

**40. தீவிரவாதிகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு சேரன்மாதேவியில் ஒரு குருகுலத்தை ஆரம்பித்தவர் யார்?**

A) வாஞ்சிநாதன்

B) வி.வி.எஸ். ஐயர்

C) வ.உ. சிதம்பரம் பிள்ளை

D) சுப்பிரமணிய சிவா

**41. இந்திய அரசியலமைப்பின் எந்தச் சரத்து ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வர குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது?**

A) 352வது சரத்து B) 353வது சரத்து

C) 355வது சரத்து D) 356வது சரத்து

**42. சுதந்திர உரிமை உறுதிப்படுத்துவது**

A) 6 உரிமைகள் B) 7 உரிமைகள்

C) 8 உரிமைகள் D) 9 உரிமைகள்

**43. போர் பிரகடனம் செய்ய அதிகாரம் பெற்றவர் யார்?**

A) குடியரசுத் தலைவர் B) பிரதம மந்திரி

C) பாராளுமன்றம் D) தரைப்படைத் தலைவர்

**44. ஒரு மாநிலத்தில் யாருடைய கையொப்பம் பெற்றால்தான் மசோதா சட்டம் ஆகும்?**

A) பிரதம மந்திரி B) சட்ட மன்றத்தலைவர்

C) ஆளுநர் D) குடியரசுத் தலைவர்

**45. "சட்டம் இல்லையேல் சுதந்திரம் இல்லை" – யார் கூறியது?**

A) லாஸ்கி B) ஹாப்ஸ்

C) லாக் D) மில்

**46. இந்தியாவில் பஞ்சாயத்துராஜ் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?**

A) 1950 B) 1959

C) 1952 D) 1962

**47. இந்திய ஜனாதிபதி என்பவர்**

A) அரசின் தலைவர்

B) அரசாங்கத்தின் தலைவர்

C) அரசு மற்றும் அரசாங்கத்தின் தலைவர்

D) இவற்றுள் எதுவுமில்லை

**48. பஞ்சாயத்துராஜ் அமைப்பின் கடைசி நிறுவனமானது**

A) கிராம பஞ்சாயத்து

B) பஞ்சாயத்து சமிதி

C) ஜில்லா பரிஷத்

D) கிராம சபை

**49. இந்தியாவின் தலைநகரமாக விளங்கும் யூனியன் பிரதேசம்**

A) சண்டிகர் B) நியூடெல்லி

C) புதுச்சேரி D) ஜெய்ப்பூர்

**50. ஒவ்வொரு மாவட்டப் பஞ்சாயத்தும் எத்தனை தலைவரைக் கொண்டுள்ளது?**

A) 2 B) 4

C) 1 D) 5

**51. சர்க்கரை தொழிற்சாலை என்பது முழுவதுமாக**

A) குறுந்தொழில்

B) நடுத்தர தொழில்

C) விவசாயத்தை அடிப்படையாக கொண்ட தொழிற்சாலை

D) இவற்றுள் எதுவுமில்லை

**52. அண்மையில் மகசேசே விருது பெற்றவர்**

A) கிரண்பேடி IPS

B) டாக்டர். சாந்தா

C) டாக்டர். விஸ்வேஸ்வரய்யா

D) டாக்டர். கோத்தாரி

**53. இந்தியாவின் நிதி அமைச்சர்**

A) ஜஸ்வந்த் சிங் B) P. சிதம்பரம்

C) C. பொன்னையன் D) கரண்சிங்

**54. உலக மக்கள்தொகை தினம்**

A) ஜூன் 11 B) ஜூன் 21

C) ஜூலை 11 D) ஜூலை 21

**55. இந்தியாவின் இயற்கை துறைமுகம்**

A) மும்பை B) தூத்துக்குடி

C) சென்னை D) கொல்கத்தா

**56. பேராசிரியர் தாவே அவர்களின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய கல்வி முறை**

A) குறைந்தபட்ச கற்றல்

B) புதிய கல்விக் கொள்கை

C) ஆரம்பக் கல்வி

D) உயர்நிலைக் கல்வி



www.recruitmentguru.com

57. **இந்திய பணச்சந்தையின் பாதுகாவலன்**
A) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
B) சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
C) இந்திய ரிசர்வ் வங்கி
D) இந்தியன் வங்கி

58. **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) 1968ல் ஐக்கிய நாடுகள் சபைக்காக அர்ப்பணித்த ஏவுதளம் அமைந்துள்ள இடம்**
A) தும்பா B) சென்னை
C) டெல்லி D) மும்பை

59. **இந்தியாவில் முதன்முதலில் துவக்கப்பட்ட இரயில் பாதை**
A) பாம்பே – மெட்ராஸ்
B) மெட்ராஸ் – கல்கத்தா
C) பாம்பே – தானே
D) டெல்லி – மெட்ராஸ்

60. **அதிக மக்கள்தொகை கொண்ட மாநிலம்**
A) கேரளா B) உத்திரப்பிரதேசம்
C) மேற்கு வங்காளம் D) மத்தியப்பிரதேசம்

61. **தமிழ்நாட்டில் ஏற்காடு நகரம் எந்த மலையில் அமைந்துள்ளது?**
A) கொல்லிமலை B) பழனிமலை
C) சேர்வராயன் மலை D) ஏலக்காய் மலை

62. **நெல் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் ................. இடத்தை வகிக்கின்றது.**
A) 3 வது B) 5 வது
C) 4 வது D) 2 வது

63. **தமிழ்நாடு 8° 5′ வ அட்சரேகை முதல் .................. வ அட்சரேகை வரையிலும் பரவியுள்ளது.**
A) 13° 35′ B) 12° 25′
C) 11° 25′ D) 10° 25′

64. **இந்தியாவின் காலநிலை எதனால் அதிக அளவிற்குப் பாதிக்கப்படுகின்றது?**
A) தலக்காற்று B) கோள் காற்று
C) பருவக்காற்று D) வியாபாரக்காற்று

65. **புவி தன்னைத்தானே சுழலுவதால் ஏற்படுவது**
A) பகல் மட்டும் B) இரவு மட்டும்
C) பகல் மற்றும் இரவு D) பருவ காலங்கள்

66. **கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தி உள்ளது?**
A) காப்பி – ஒரிஸ்ஸா
B) ரப்பர் – கேரளா
C) தேயிலை – கர்நாடகா
D) சணல் – அஸ்ஸாம்

67. **கீழ்க்கண்ட துறைமுகங்களில் எது இந்தியாவின் கிழக்கு கடற்கரையில் அமையவில்லை?**
A) பாரதீப் B) காண்ட்லா
C) விசாகப்பட்டினம் D) சென்னை

68. **முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்ட துறை**
A) விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்
B) பெரிய கனரக தொழிற்சாலைகள்
C) வேலையின்மை மற்றும் வறுமை
D) தொலைதொடர்பு மற்றும் கல்வி

69. **ஒரே மாதிரியான புவியியல் காரணிகள் கொண்ட பகுதி**
A) வட்டாரம் B) நாடு
C) கண்டம் D) உலகம்

70. **இந்தியாவில் காடு ஆராய்ச்சி நிலையம் எங்கு அமைந்துள்ளது?**
A) டெல்லி B) போபால்
C) டேராடூன் D) லக்னோ

71. **ஹரப்பா நாகரிகம் வளர்ச்சியுற்ற காலம்**
A) கி.மு. 3250 – கி.மு. 2750
B) கி.பி. 100 – கி.பி. 200
C) கி.மு. 1000 – கி.மு. 500
D) கி.பி. 500 – கி.பி. 1000

72. **மகாயான புத்தமதம் தோன்றிய காலம்**
A) அஜாதசத்ரு B) அசோகர்
C) கனிஷ்கர் D) விக்ரமாதித்தர்

73. **முகமது பின் துக்ளக் தனது தலைநகரை டில்லியில் இருந்து மாற்றிய இடம்**
A) கன்னோசி B) தேவகிரி
C) ஆக்ரா D) அகமதாபாத்

74. **வில்லியம் ஹாக்கின்ஸ் வருகைதந்த முகலாயப் பேரரசின் அவை எது?**
A) அக்பர் B) ஜஹாங்கீர்
C) ஷாஜஹான் D) ஔரங்கசீப்

75. **கீழ்கண்டவற்றுள் எது சரியாகப் பொருந்தி உள்ளது?**
A) ஒழுங்குமுறை சட்டம் – 1773
B) பிட் இந்திய சட்டம் – 1763
C) மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் – 1907
D) மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் – 1909

76. **தீண்டாமையை ஒழிக்க பாடுபட்ட தலைவர்**
A) டாக்டர். அம்பேத்கர்
B) இராஜா ராம்மோகன் ராய்
C) அன்னிபெசன்ட்
D) பாலகங்காதர திலகர்

77. **இந்தியாவின் முதல் வைஸ்ராய்**
A) கானிங் பிரபு B) கர்சன் பிரபு
C) டல்ஹௌசி பிரபு D) மிண்டோ பிரபு

78. **மத்தவிலாசப் பிரகடனம் என்ற நூலை எழுதியவர்**
A) முதலாம் மகேந்திரவர்மன்
B) முதலாம் நரசிம்மவர்மன்
C) நாதமுனி
D) நம்பியாண்டார் நம்பி

www.recruitmentguru.com

**79. சிவகாமியின் சபதம் என்ற புகழ்பெற்ற வரலாற்று புதினத்தை எழுதியவர்**
A) அகிலன் B) சாண்டில்யன்
C) கல்கி D) பாலகுமாரன்

**80. பண்டைய சோழர்களின் தலைநகரம் எது?**
A) தொண்டி B) முசிறி
C) காவிரிப்பூம்பட்டினம்
D) திருச்சி

**81. நைட்ரஜனை நிலைப்படுத்தும் பாக்டீரியாக்கள் எதன் வேர்களில் காணப்படுகிறது?**
A) புற்கள்
B) எலுமிச்சை
C) லெகுமினஸ் தாவரம்
D) வேப்பமரம்

**82. சாண எரிவாயுவில் உள்ள வாயு**
A) மீதேன் B) மீதேன் மற்றும் ஈதேன்
C) ஈதேன் D) பெட்ரோல் வாயு

**83. ஃபுளோயம் திசு சார்ந்தவற்றின் பொருந்தாதவற்றை கண்டறிக.**
A) சல்லடைக் குழாய் B) துணை செல்கள்
C) ஃபுளோயம் நார்கள் D) மர நார்கள்

**84. ஸ்பைரோகைராவில் நடைபெறும் பாலின இனப்பெருக்கம் என்பது**
A) துண்டாதல் B) ஸ்போர் உருவாக்குதல்
C) இணைதல் D) பிளத்தல்

**85. தாவர உலகமானது இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது. அவை,**
A) ஒரு வித்திலை மற்றும் இருவித்திலைத் தாவரங்கள்
B) பிரையோபைட் மற்றும் டெரிடோபைட்
C) கிரிப்டோகாம் மற்றும் ஃபெனரோகாம்
D) நீர்வாழ்பவை மற்றும் நிலத்தில் வாழ்பவை

**86. மலேரியா காய்ச்சல் எதனால் உண்டாகிறது?**
A) பெண் அனாபிலஸ் கொசுவினால்
B) மாசுபட்ட காற்று
C) வைரஸ்
D) பிளாஸ்மோடியம்

**87. நமது இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபினில் காணப்படும் தனிமம்**
A) செம்பு B) இரும்பு
C) வெள்ளி D) தங்கம்

**88. குட்டி போட்டு இனப்பெருக்கம் செய்யும் மீன்**
A) டால்ஃபின் B) நட்சத்திர மீன்
C) சுறா மீன் D) ஜெல்லி மீன்

**89. இரத்த ஓட்டத்தைக் கண்டுபிடித்தவர்**
A) அலெக்ஸாண்டர் பிளெமிங்
B) ஐன்ஸ்டீன்
C) வில்லியம் ஹார்வி
D) எட்வர்டு ஜென்னர்

**90. ஆர்னித்தாலஜி எனப்படுவது................படிப்பு**
A) பூச்சிகள் பற்றிய
B) புழுக்கள் பற்றிய
C) மீன்கள் பற்றிய
D) பறவைகள் பற்றிய

**91. 3 கிலோவாட் மின் அடுப்பு ஒன்று 6 மணி நேரம் பயன்படுத்தப்படும்பொழுது செலவாகும் மின்னாற்றலின் மதிப்பு**
A) 2 அலகுகள் B) 18 அலகுகள்
C) 0.5 அலகு D) 500 அலகுகள்

**92. பின்வருவனவற்றுள் முதன்மை நிறங்கள் யாவை?**
A) சிவப்பு, பச்சை மற்றும் ஊதா
B) நீலம், சியான் மற்றும் மெஜன்டா
C) சிவப்பு, சியான் மற்றும் நீலம்
D) சிவப்பு, பச்சை மற்றும் நீலம்

**93. நீள விரிவெண் ( $\alpha$ ) மற்றும் பரும விரிவெண் ( $\gamma$ ) இவற்றிற்கிடையேயான தொடர்பு யாது?**
A) $\alpha = 3\gamma$ B) $2\gamma = \alpha$
C) $\gamma = 2\alpha$ D) $\gamma = 3\alpha$

**94. இதயம் செயல்படும் திறனை கண்டறியப் பயன்படும் ரேடியோ ஐசோடோப்பு**
A) $I^{131}$ B) $Na^{24}$
C) $Fe^{59}$ D) $P^{32}$

**95. கரைசலில் உள்ள வைரஸ்களை, மிகைவேக மையவிலக்கி மூலம் செறிவூட்ட தேவையான வேகம்**
A) $5\times10^{-5}$ rpm B) $5\times10^{6}$ rpm
C) $5\times10^{5}$ rpm D) $5\times10^{-6}$ rpm

**96. உலோகங்கள் நேர்மின்சுமை அயனியை உருவாக்கும், ஏனெனில்**
A) எலக்ட்ரான்களை ஏற்றுக்கொள்கிறது
B) எலக்ட்ரான்களைக் கொடுக்கின்றது
C) நடுநிலை வாய்ந்தது
D) எலக்ட்ரான்களைப் பெற்றுள்ளது

**97. பாரிஸ் சாந்தின் மூலக்கூறு வாய்ப்பாட்டை தெரிவு செய்**
A) $CaSO_4 . H_2O$
B) $CaSO_4 . 2H_2O$
C) $CaSO_4 . \frac{1}{2}H_2O$
D) $CaSo_4 . 1\frac{1}{2}H_2O$

**98. துருப்பிடிக்காத எஃகின் உலோக கலவை யாது?**
A) தாமிரம், நிக்கல், குரோமியம்
B) தாமிரம், டங்ஸ்டன், குரோமியம்
C) இரும்பு, நிக்கல், குரோமியம்
D) இரும்பு, டங்ஸ்டன், குரோமியம்



www.recruitmentguru.com

99. பொதுவாக உலோக ஆக்ஸைடுகள் பெற்றுள்ள பண்பு
A) அமிலத்தன்மை
B) நடுநிலைத் தன்மை
C) காரத்தன்மை
D) ஈரியல்பு தன்மை

100. வடித்து பிரித்த ஆல்கஹால் என்பது
A) 90% எத்தனால் மற்றும் 10% நீர்
B) 80% எத்தனால் மற்றும் 20% நீர்
C) 95.6% எத்தனால் மற்றும் 4.4% நீர்
D) 96.5% எத்தனால் மற்றும் 3.5% நீர்

# பொதுத்தமிழ்

101. "வேலியே பயிரை மேய்வது போல" – இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருளை அறிக.
A) பாதுகாத்தல் B) கட்டுதல்
C) மீறுதல் D) மிதித்தல்

102. "இடியோசை கேட்ட நாகம் போல்" – இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருளை அறிக.
A) அழுகை B) அச்சம்
C) கோபம் D) பரிதவிப்பு

103. "அத்தி பூத்தாற் போல" – இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருளை அறிக.
A) எளிமை B) அருமை
C) பெருமை D) சிறுமை

104. "உள்ளங்கை நெல்லிக்கனி போல" – இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருளை அறிக.
A) நல்லோர் கூறும் வார்த்தைகள்
B) தெள்ளத் தெளிவாக தெரிதல்
C) தன் கையே உதவுதல்
D) சிறியன செய்தல்

105. "பூவுடன் சேர்ந்த நாரும் மணப்பது போல" – இவ்வுவமையால் விளக்கப்பெறும் பொருத்தமான பொருளை அறிக.
A) புகழ் B) இன்பம்
C) அவலம் D) போற்றுதல்

106. பின்வரும் தொடரில் அமைந்த மோனையை எழுதுக.
"அங்கொன்றும் இங்கொன்றும் முன்னர்த் தோன்றி அடுத்த நொடி வான் நிறையும் விண்மீன் கூட்டம்"
A) அங்கொன்றும் – இங்கொன்றும்
B) அங்கொன்றும் – வான்நிறையும்
C) அங்கொன்றும் – அடுத்த நொடி
D) அங்கொன்றும் – விண்மீன் கூட்டம்

107. "இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே! எறிதரங்கம்" – சீர்மோனை அறிக.
A) இமய – இளமென்
B) பிடியே – எறிதரங்கம்
C) இளமென் – விளையாடும்
D) பொருப்பில் – இமய

108. "முனிபவர் அரக்கியர் முறையின் நீங்கினாள் இனி அவள் தானலா தியாரும் இல்லையால்" சீர்எதுகை தேர்க.
A) முனிபவர் – முறை
B) இனிஅவள் – அரக்கியர்
C) தானலா – தியாரும்
D) முனிபவர் – இனிஅவள்

109. பின்வரும் தொடரில் அமைந்த எதுகையை எழுதுக
"மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம் பண்தேய்த்த மொழியினார் ஆயத்து"
A) மண்தேய்த்த – பண்தேய்த்த
B) புகழினான் – ஆயத்து
C) மதிமுக – மொழியினார்
D) மடவார் – மதிமுக

110. "அலைபட்ட மனதிற்கு அமைதிக்கு வழியாம் மலையுச்சி ஒளியன்ன மறைவற்ற மொழியாம்" – இதிலுள்ள இயைபுத் தொடையை எழுதுக.
A) மனதிற்கு – அமைதிக்கு
B) மலையுச்சி – அலைபட்ட
C) வழியாம் – மொழியாம்
D) ஒளியன்ன – மறைவற்ற

111. "குடியரசுத் தலைவர் சென்னைக்கு வருகை தந்தார்" –இது எவ்வகை வாக்கியம்?
A) செய்தி வாக்கியம்
B) கட்டளை வாக்கியம்
C) வினா வாக்கியம்
D) உணர்ச்சி வாக்கியம்

112. "அவன் இதைச் செய்ய வேண்டும்" –இது எவ்வகை வாக்கியம்?
A) வினா வாக்கியம் B) கட்டளை வாக்கியம்
C) செய்தி வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்

113. "அறம் செய விரும்பு" – வாக்கியத்தின் வகை அறிக
A) உணர்ச்சி வாக்கியம்
B) கட்டளை வாக்கியம்
C) செய்தி வாக்கியம்
D) எதிர்மறை வாக்கியம்

**114. "என்னே! பெரியாரின் பொது நலத்தொண்டு" – வாக்கியத்தின் வகை அறிக**

A) செய்தி வாக்கியம் B) உணர்ச்சி வாக்கியம்
C) கட்டளை வாக்கியம் D) தனி வாக்கியம்

**115. "வெறுஞ்சமையலும் தையலுந்தானா மனைக்கலை" – வாக்கியத்தின் வகை அறிக.**

A) கட்டளை வாக்கியம் B) செய்தி வாக்கியம்
C) வினா வாக்கியம் D) உணர்ச்சி வாக்கியம்

**116. "சீனிவாசன் தங்கம் வாங்கினான்" – வாக்கிய அமைப்பு சுட்டுக.**

A) தன்வினை B) செயப்பாட்டு வினை
C) கட்டளை வாக்கியம் D) பிறவினை

**117. "தங்கை நடனம் ஆட்டுவித்தாள்" – வாக்கிய அமைப்பு சுட்டுக.**

A) செயப்பாட்டு வினை
B) பிற வினை
C) தன் வினை
D) செய் வினை

**118. செயப்பாட்டு வினையைக் கண்டறிக.**

A) மாணவன் பாடம் படித்தான்
B) பாடம் மாணவனால் படிக்கப்பட்டது
C) மாணவன் படித்தான் பாடத்தை
D) பாடம் படித்தான் மாணவன்

**119. தன்வினைச் சொல்லை கண்டறிக.**

A) இளங்கோவடிகள் நூல் செய்யப்பட்டது
B) இளங்கோவடிகள் நூல் செய்தார்
C) இளங்கோவடிகளின் நூல் செய்யப்பட்டது
D) இளங்கோவடிகளால் செய்யப்பட்டது நூல்

**120. "செய்வினைத் தொடர்" எடுத்துக்காட்டுக :**

A) தமிழாசிரியர் தமிழ் கற்பித்தார்
B) தமிழாசிரியரால் தமிழ் கற்பிக்கப்பட்டது
C) தமிழ் தமிழாசிரியரால் கற்பிக்கப்பட்டது
D) தமிழ் கற்பிக்கப்பட்டது தமிழாசிரியரால்

**121. "வாழ்தல்" – என்பதன் இலக்கணக் குறிப்பு**

A) பண்புத்தொகை
B) வினைத்தொகை
C) தொழிற்பெயர்
D) வினைமுற்று

**122. "மாநகர்" –என்பதன் இலக்கணக் குறிப்பு வரைக.**

A) அடுக்குத் தொடர்
B) உரிச்சொல் தொடர்
C) வேற்றுமைத் தொகை
D) வினைத்தொகை

**123. "காய்சினம்" –என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.**

A) மூன்றாம் வேற்றுமைத் தொகை
B) இலக்கணப் போலி
C) பொருளாகு பெயர்
D) வினைத்தொகை

**124. "சுனைகளும் புனல்களும்" –என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க**

A) எண்ணும்மை
B) உயர்வு சிறப்பு உம்மை
C) உம்மைத்தொகை
D) இழிவுச் சிறப்பும்மை

**125. "வேண்டாக்குப்பை" –என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க**

A) ஈறுகெட்ட பெயரெச்சம்
B) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
C) எதிர்மறைப் பெயரெச்சம்
D) பெயரெச்சம்

**126. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல் : "இயற்கையைச் சார்ந்தே மனம் இயங்குகிறது"**

A) மனம் இயங்குகிறதா?
B) இயற்கையாக மனம் இயங்குகிறதா?
C) மனம் எதைச் சார்ந்து இயங்குகிறது?
D) மனம் இயங்குகிறது என்றால் என்ன?

**127. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்: "மனிதர் மனோபாவம் வானைப்போல் விரிவடைய வேண்டும்"**

A) எதைப் போல் விரிய வேண்டும்?
B) எது விரிதல் வேண்டும்?
C) மனோபாவம் யாருடையது?
D) மனிதர் மனோபாவம் எதைப்போல் விரிய வேண்டும்?

**128. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்: "நற்றிணை ஓர் அக இலக்கியமாகும்"**

A) நற்றிணை புற இலக்கியமா?
B) நற்றிணை இக்கால இலக்கியமா?
C) நற்றிணை எந்த வகை இலக்கியம்?
D) நற்றிணை காப்பிய இலக்கியமா?

**129. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்: "வள்ளத்தோள் பாடலை மொழிபெயர்த்தவர் துறைவன்"**

A) வள்ளத்தோள் பாடலை மொழிபெயர்த்தவர் யார்?
B) வள்ளத்தோள் பாடல்கள் எவை?
C) வள்ளத்தோள் பாடல்கள் மொபெயர்க்கப் பட்டனவா?
D) வள்ளத்தோள் பாடல்கள் மொழிபெயர்ப்பா?

**130. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடுத்தல்: "திரிகடுகத்தின் ஆசிரியர் நல்லாதனார் ஆவார்"**

A) திரிகடுகம் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றா?
B) சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்து களின் பெயரைக் கொண்டதா?
C) திரிகடுகம் என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?
D) திரிகடுகத்தின் சிறப்பு யாது?

**131. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.**

A) ஆயிரங்காலத்து என்பது பயிர் திருமணம்
B) திருமணம் பயிர் என்பது ஆயிரங்காலத்து



www.recruitmentguru.com

C) திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர்
D) பயிர் என்பது ஆயிரங் காலத்துத் திருமணம்

132. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.
A) மருந்தே ஆயினும் உண் விருந்தோடு
B) ஆயினும் மருந்தே விருந்தோடு உண்
C) மருந்தே ஆயினும் விருந்தோடு உண்
D) விருந்தோடு மருந்தே ஆயினும் உண்

133. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.
A) எழிலன் எல்லாரிடமும் விருப்பு வெறுப்பின்றிப் பேசுவான்
B) எல்லோரிடமும் எழிலன் வெறுப்பின்றி விருப்பு பேசுவான்
C) விருப்பு வெறுப்பின்றி பேசுவான் எழிலன் எல்லாரிடமும்
D) வெறுப்பின்றிப் பேசுவான் எழிலன் எல்லாரிடமும் விருப்பு

134. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.
A) அடிகள் என்றியம்பினார் நீரே அருளுக
B) நீரே அருளுக என்றியம்பினார் அடிகள்
C) அடிகள் நீரே அருளுக என்றியம்பினார்
D) என்றியம்பினரார் அடிகள் அருளுக நீரே

135. சொற்களை ஒழுங்குபடுத்தி சொற்றொடர் ஆக்குக.
A) நாமநீர் அவன் அளி உலகிற்கு வேலி
B) வேலி உலகிற்கு நாமநீர் அவன் அளி
C) நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளி
D) வேலி உலகிற்கு அவன் அளி நாமநீர்

136. "பொன்னன்" – பெயர்ச்சொல்லின் வகை அறிக.
A) இடப்பெயர் B) பண்புப்பெயர்
C) தொழிற்பெயர் D) பொருட்பெயர்

137. "கோவை" – பெயர்ச்சொல்லின் வகை அறிக.
A) காலப்பெயர் B) பண்புப்பெயர்
C) இடப்பெயர் D) தொழிற்பெயர்

138. "பங்குனி" – பெயர்ச்சொல்லின் வகை அறிக.
A) பொருட்பெயர் B) சினைப்பெயர்
C) இடப்பெயர் D) காலப்பெயர்

139. "கால்" – பெயர்ச்சொல்லின் வகை அறிக.
A) இடப்பெயர் B) சினைப்பெயர்
C) பொருட்பெயர் D) பண்புப்பெயர்

140. "செவ்வகம்" – பெயர்ச்சொல்லின் வகை அறிக.
A) பொருட்பெயர் B) பண்புப்பெயர்
C) காலப்பெயர் D) தொழிற்பெயர்

141. "உண்" என்னும் வேர்ச்சொல்லை வினைமுற்றாக எழுதுக.
A) உண்டு B) உண்ணு
C) உண்டான் D) உண்டல்

142. "செல்" என்னும் வேர்ச்சொல்லை வினையெச்சமாக்குக.
A) சென்ற B) செல்லு
C) சென்றான் D) சென்று

143. "தின்" என்பதன் வினையாலணையும் பெயரைக் குறிக்க.
A) தின்னு B) தின்னுதல்
C) தின்ன D) தின்பவன்

144. "நடி" என்ற வேர்ச்சொல்லின் தொழிற்பெயரை அறி
A) நடிக்க B) நடித்த
C) நடித்தல் D) நடிக்கும்

145. "அள" எனும் வேர்ச்சொல்லின் வினையெச்சம் அறி
A) அளந்து B) அளந்த
C) அளந்தாள் D) அளந்தும்

146. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்க.
A) தங்கம், திங்கள், தேர், தூண்டில், தோப்பு
B) தங்கம், தேர், திங்கள், தோப்பு, தூண்டில்
C) தங்கம், திங்கள், தூண்டில், தேர், தோப்பு
D) திங்கள், தங்கம், தேர், தூண்டில், தோப்பு

147. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்க.
A) பெருமை, போற்று, பேரரசு, பொறுமை
B) பேரரசு, பொறுமை, போற்று, பெருமை
C) போற்று, பேரரசு, பெருமை, பொறுமை
D) பெருமை, பேரரசு, பொறுமை, போற்று

148. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்க.
A) சங்கு, சாட்டை, சீப்பு, சிவப்பு, சோறு
B) சாட்டை, சீப்பு, சிவப்பு, சோறு, சங்கு
C) சங்கு, சாட்டை, சிவப்பு, சீப்பு, சோறு
D) சங்கு, சிவப்பு, சாட்டை, சீப்பு, சோறு

149. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்க.
A) அனல், இன்பம், உயிர், ஆபரணம்
B) அனல், ஆபரணம், இன்பம், உயிர்
C) உயிர், இன்பம், அனல், ஆபரணம்
D) ஆபரணம், இன்பம், உயிர், அனல்

150. அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்க.
A) உழவன், வாணிபம், இடையன், ஊதியம்
B) ஊதியம், இடையன், வாணிபம், உழவன்
C) வாணிபம், உழவன், இடையன், ஊதியம்
D) வாணிபம், இடையன், உழவன், ஊதியம்

151. 'தே' – என்னும் ஒரெழுத்தொரு மொழியி பொருளைக் காண்க.
A) தேசம் B) தேகம்
C) தெய்வம் D) கடவுள்

152. 'பூ' – என்னும் ஒரெழுத்தொரு மொழியின் பொருளை காண்க.
A) மலராத B) மொட்டு
C) அரும்பு D) மலர்

153. 'மா' – என்னும் ஒரெழுத்தொரு மொழியின் பொருளை காண்க.
A) விலங்கு B) பெரிய
C) மகா D) மரம்

154. 'மீ' – என்னும் ஒரெழுத்தொரு மொழியின் பொருளை காண்க.
A) மேல் B) மேடு
C) மேன்மை D) மீன்

www.recruitmentguru.com

155. 'வீ' – என்னும் ஓரெழுத்தொரு மொழியின் பொருளைக் காண்க.
A) வாசனை B) வீழ்தல்
C) மலர் D) மாலை

156. 'துவங்கினான்'–எனும் சொல்லின் வேர்ச்சொல் அறிக.
A) துவங்கும் B) துவங்கிய
C) துவங்கு D) துவங்

157. 'பயின்றான்' – எனும் சொல்லின் வேர்ச்சொல் அறிக.
A) பயின்று B) பயில்
C) பயிலும் D) பயில

158. 'சொல்லுவேன்' – எனும் சொல்லின் வேர்ச்சொல் அறிக.
A) சொல்லு B) சொல்லி
C) சொல்லுதல் D) சொல்

159. 'கண்டான்' – எனும் சொல்லின் வேர்ச்சொல் அறிக.
A) காண் B) கண்
C) கண்டு D) காண்கு

160. 'வந்தான்' – எனும் சொல்லின் வேர்ச்சொல் அறிக.
A) வந்த B) வந்து
C) வா D) வந்தா

161. 'Missile' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்த் தொடர் தேர்க.
A) ஏவுகணை
B) கோள்கள்
C) கிரகங்கள்
D) விண்மீன்கள்

162. 'Washing Machine' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்த் தொடர் தருக.
A) துவைக்கும் மிஷின்
B) துணிதுவைக்கும் பொறி
C) சலவை இயந்திரம்
D) சலவை கருவி

163. 'Transport corporation' – என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்த் தொடர் தருக.
A) டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்
B) போக்குவரத்து நிறுவனம்
C) போக்குவரத்துக் கழகம்
D) போக்குவரத்து நிலையம்

164. 'வில்லேஜ்'– இணையான தமிழ் சொல் தருக.
A) கிராமம்
B) சிற்றூர்
C) குடிசை வீடு
D) மாடி வீடு

165. 'பஜார்' – இணையான தமிழ் சொல் தருக.
A) கடைவீதி
B) கடைத்தெரு
C) மக்கள் கூடும் இடம்
D) பொருள் வாங்கும் இடம்

166. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | பனி | பணி |
|---|---|---|
| A) | மேகம் | கூறுதல் |
| B) | வானம் | கட்டளை |
| C) | குளிர்ச்சி | வேலை |
| D) | மழை | கீழ்படிதல் |

167. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | திரை | திறை |
|---|---|---|
| A) | கடல் | பொருள் |
| B) | அலை | கப்பம் |
| C) | நுரை | பொன் |
| D) | நரை | சங்கு |

168. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | இரும்பு | இறும்பு |
|---|---|---|
| A) | உலோகம் | புதர் |
| B) | குச்சி | கடல் |
| C) | சட்டை | பலகை |
| D) | வலிமை | மூழ்கு |

169. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | பொரி | பொறி |
|---|---|---|
| A) | வளை | ஏறு |
| B) | வீசு | நோய் |
| C) | நெல்பொரி | இயந்திரம் |
| D) | பொரித்தல் | புல் |

170. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க.

| | இறத்தல் | இரத்தல் |
|---|---|---|
| A) | சேர்தல் | கூறுதல் |
| B) | இறைத்தல் | சொல்லுதல் |
| C) | சாதல் | யாசித்தல் |
| D) | வீழ்தல் | கேட்டல் |

171. பொருந்தாச் சொல்லை கண்டறிக.
A) சிலப்பதிகாரம்
B) மணிமேகலை
C) சீவக சிந்தாமணி
D) பாப்பா பாட்டு

172. பொருந்தாச் சொல்லை கண்டறிக.
A) இறந்த காலம் B) நிகழ் காலம்
C) கார் காலம் D) எதிர் காலம்

173. பொருந்தாச் சொல்லை கண்டறிக.
A) பிறஇனம் B) வல்லினம்
C) மெல்லினம் D) இடையினம்

174. பொருந்தாச் சொல்லை கண்டறிக.
A) பசுமை B) கருமை
C) மும்மை D) செம்மை

175. பொருந்தாச் சொல்லை கண்டறிக.
A) அச்சம் B) மடம்
C) ஒட்டம் D) நாணம்



www.recruitmentguru.com

**176. சந்திப்பிழை இல்லாத் தொடரை தேர்க.**

A) கல்வி செல்வத்தை போற்றாதவர் இலர்
B) கல்விச் செல்வத்தை போற்றாதவர் இலர்
C) கல்வி செல்வத்தைப் போற்றாதவர் இலர்
D) கல்விச் செல்வத்தைப் போற்றாதவர் இலர்

**177. ஒருமை, பன்மை பிழைகளை நீக்குக.**

A) நாடகக் கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தது
B) நாடகக் கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தனர்
C) நாடகக் கலைஞன் நாட்டுப்பற்றை வளர்த்தனர்
D) நாடகக் கலைஞர்கள் நாட்டுப்பற்றை வளர்த்தன

**178. மரபுப் பிழைகள் அற்ற தொடரைக் குறிப்பிடுக.**

A) சிங்கக்குட்டி
B) சிங்கக் குழந்தை
C) சிங்கக் குருளை
D) சிங்கக் கன்று

**179. வழூஉச் சொற்களை நீக்கிய தொடரை தேர்க :**

A) நஞ்சையும் புஞ்சையுமா நாலு காணி
B) நஞ்சையும் புஞ்சையுமா நான்கு காணி
C) நன்செயும் புன்செயுமாக நான்கு காணி
D) நன்செயும் புஞ்சையுமா நாலு காணி

**180. பிற மொழிச் சொற்களை நீக்குக.**

A) குடிப்பதற்கு ஜலம் கொண்டு வா
B) குடிப்பதற்கு சலம் கொண்டு வா
C) குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டு வா
D) குடிப்பதற்குத் தன்னீர் கொண்டு வா

**181. 'எங்கையர்' – பிரித்தெழுதுக**

A) எங் + கையர்
B) எம் + கையர்
C) எங்கை + அர்
D) எ + கையர்

**182. 'கல்லளை' – பிரித்தெழுதுக**

A) கல் + தளை
B) கல் + அளை
C) கல் + லளை
D) கல்ல + ளை

**183. 'ஒட்டலரிது' – பிரித்தெழுதுக**

A) ஒட்ட + அரிது
B) ஒட்டு + அரிது
C) ஒட்டல் + இரிது
D) ஒட்டல் + அரிது

**184. 'சின்னதொரு' – பிரித்தெழுதுக**

A) சின்ன + தொரு
B) சின்ன + ஒரு
C) சின்னது + ஒரு
D) சின்னு + ஒரு

**185. 'செந்தாமரை' – பிரித்தெழுதுக**

A) செம்மை + தாமரை
B) செந் + தாமரை
C) செம் + தாமரை
D) செந்தா + மரை

**186. 'துன்பம்' – என்பதற்கு எதிரான சொல் தருக.**

A) அன்பு
B) இன்பம்
C) கோபம்
D) அல்லல்

**187. 'அல்' – என்பதன் எதிர்ச்சொல் தருக.**

A) பகல்
B) நண்பகல்
C) இரவு
D) மாலை

**188. 'இனியது' – என்பதன் எதிர்ச்சொல் தருக.**

A) சுவையானது
B) அரியது
C) இன்னாதது
D) எளியது

**189. 'வளருதல்' – என்பதன் எதிர்ச்சொல் தருக.**

A) உயர்தல்
B) தேய்தல்
C) பெருகுதல்
D) நீளுதல்

**190. 'திண்மை' – என்பதன் எதிர்ச்சொல் தருக.**

A) மென்மை
B) வன்மை
C) மேன்மை
D) வளமை

**191. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சொற்பொருள் அறிந்து பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| 1. யாக்கை | அ. ஆசை |
| 2. மோகம் | ஆ. விடியல் |
| 3. வைகறை | இ. யானை |
| 4. வேழம் | ஈ. உடல் |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | அ | ஈ | ஆ |
| B) | ஈ | அ | ஆ | இ |
| C) | அ | ஆ | இ | ஈ |
| D) | ஈ | இ | அ | ஆ |

**192. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சொற்பொருள் அறிந்து பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :**

| பட்டியல் I *(சொல்)* | பட்டியல் II *(பொருள்)* |
|---|---|
| 1. தண் | அ. கருமை |
| 2. களி | ஆ. வேகம் |
| 3. வீறு | இ. குளிர் |
| 4. கார் | ஈ. மகிழ்ச்சி |

குறியீடுகள் :

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஆ | ஈ |
| B) | இ | ஈ | ஆ | அ |
| C) | ஆ | அ | ஈ | இ |
| D) | ஈ | இ | அ | ஆ |

www.recruitmentguru.com

**193. பட்டியல் Iஐ பட்டியல் II உடன் சொற்பொருள் அறிந்து பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :**

| பட்டியல் I *(சொல்)* | பட்டியல் II *(பொருள்)* |
|---|---|
| 1. படி | அ. தளிர் |
| 2. பொலம் | ஆ. துயர் |
| 3. பல்லவம் | இ. நிலம் |
| 4. படர் | ஈ. அழகு |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | அ | ஆ |
| B) | ஆ | இ | ஈ | அ |
| C) | அ | ஈ | ஆ | இ |
| D) | ஈ | அ | இ | ஆ |

**194. பட்டியல் Iல் உள்ள நூல்களை பட்டியல் IIல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப் பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :**

| பட்டியல் I *(நூல்)* | பட்டியல் II *(நூலாசிரியர்)* |
|---|---|
| 1. திருவாசகம் | அ. செயங்கொண்டார் |
| 2. திருப்பாவை | ஆ. அருணகிரிநாதர் |
| 3. திருப்புகழ் | இ. மாணிக்கவாசகர் |
| 4. கலிங்கத்துப்பரணி | ஈ. ஆண்டாள் |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | இ | ஈ | ஆ | அ |
| B) | ஈ | இ | அ | ஆ |
| C) | ஆ | அ | இ | ஈ |
| D) | ஈ | அ | இ | ஆ |

**195. பட்டியல் Iல் உள்ள நூல்களை பட்டியல் IIல் உள்ள நூலாசிரியர்களுடன் பொருத்தி, கீழே கொடுக்கப் பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :**

| பட்டியல் I *(நூல்)* | பட்டியல் II *(நூலாசிரியர்)* |
|---|---|
| 1. குற்றாலக் குறவஞ்சி | அ. குமரகுருபரர் |
| 2. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | ஆ. இளங்கோவடிகள் |
| 3. கம்பராமாயணம் | இ. திரிகூட இராசப்பக் கவிராயர் |
| 4. சிலப்பதிகாரம் | ஈ. கம்பர் |

**குறியீடுகள் :**

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A) | அ | இ | ஆ | ஈ |
| B) | இ | ஈ | அ | ஆ |
| C) | ஆ | இ | ஈ | அ |
| D) | இ | அ | ஈ | ஆ |

**196. 'தமிழ்த்தென்றல்' என்ற அடைமொழியால் குறிக்கப்படுபவர்**

A) திரு.வி.க. B) ம.பொ.சி

C) பாரதியார் D) சுரதா

**197. 'முத்தமிழ்க் காவலர்' என்று அழைக்கப்படுபவர்**

A) கி.ஆ.பெ. விசுவநாதம்

B) பேரறிஞர் அண்ணா

C) மாயூரம் வேதநாயகம் பிள்ளை

D) சேக்கிழார்

**198. 'இராம காதை' – அடைமொழியால் குறிக்கும் நூல்**

A) கம்பராமாயணம் B) சிலப்பதிகாரம்

C) திருப்பாவை D) பெரிய புராணம்

**199. 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' தொடரால் குறிக்கப்பெறும் நூல்**

A) மணிமேகலை B) சிலப்பதிகாரம்

C) பெரிய புராணம் D) நளவெண்பா

**200. 'தமிழ்மறை' என குறிக்கப்படும் நூல்**

A) அகத்தியம்

B) திருக்குறள்

C) சிலப்பதிகாரம்

D) அகநானூறு



www.recruitmentguru.com

# விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. (C) | 2. (B) | 3. (A) | 4. (B) | 5. (C) | 6. (A) | 7. (B) | 8. (A) | 9. (B) | 10. (B) |
| 11. (B) | 12. (A) | 13. (A) | 14. (C) | 15. (C) | 16. (C) | 17. (D) | 18. (B) | 19. (A) | 20. (A) |
| 21. (D) | 22. (B) | 23. (B) | 24. (D) | 25. (D) | 26. (D) | 27. (A) | 28. (C) | 29. (D) | 30. (B) |
| 31. (B) | 32. (A) | 33. (B) | 34. (D) | 35. (A) | 36. (D) | 37. (C) | 38. (B) | 39. (B) | 40. (B) |
| 41. (D) | 42. (A) | 43. (A) | 44. (C) | 45. (C) | 46. (B) | 47. (A) | 48. (A) | 49. (B) | 50. (C) |
| 51. (C) | 52. (B) | 53. (B) | 54. (C) | 55. (A) | 56. (A) | 57. (C) | 58. (A) | 59. (C) | 60. (B) |
| 61. (C) | 62. (A) | 63. (A) | 64. (C) | 65. (C) | 66. (B) | 67. (B) | 68. (A) | 69. (A) | 70. (C) |
| 71. (A) | 72. (C) | 73. (B) | 74. (B) | 75. (A) | 76. (A) | 77. (A) | 78. (A) | 79. (C) | 80. (C) |
| 81. (C) | 82. (A) | 83. (D) | 84. (A) | 85. (C) | 86. (D) | 87. (B) | 88. (A) | 89. (C) | 90. (D) |
| 91. (B) | 92. (D) | 93. (D) | 94. (B) | 95. (C) | 96. (B) | 97. (C) | 98. (C) | 99. (C) | 100. (C) |
| 101. (C) | 102. (B) | 103. (B) | 104. (B) | 105. (A) | 106. (C) | 107. (A) | 108. (D) | 109. (A) | 110. (C) |
| 111. (A) | 112. (B) | 113. (B) | 114. (B) | 115. (D) | 116. (A) | 117. (B) | 118. (B) | 119. (B) | 120. (A) |
| 121. (C) | 122. (B) | 123. (D) | 124. (A) | 125. (B) | 126. (C) | 127. (D) | 128. (C) | 129. (A) | 130. (C) |
| 131. (C) | 132. (C) | 133. (A) | 134. (B) | 135. (C) | 136. (B) | 137. (C) | 138. (D) | 139. (B) | 140. (B) |
| 141. (C) | 142. (D) | 143. (D) | 144. (C) | 145. (A) | 146. (C) | 147. (D) | 148. (C) | 149. (B) | 150. (*) |
| 151. (C) | 152. (D) | 153. (A) | 154. (C) | 155. (C) | 156. (C) | 157. (B) | 158. (D) | 159. (A) | 160. (C) |
| 161. (A) | 162. (C) | 163. (C) | 164. (A) | 165. (B) | 166. (C) | 167. (B) | 168. (A) | 169. (C) | 170. (C) |
| 171. (D) | 172. (C) | 173. (A) | 174. (C) | 175. (C) | 176. (B) | 177. (B) | 178. (*) | 179. (*) | 180. (C) |
| 181. (B) | 182. (B) | 183. (D) | 184. (C) | 185. (A) | 186. (B) | 187. (A) | 188. (C) | 189. (B) | 190. (A) |
| 191. (B) | 192. (B) | 193. (A) | 194. (A) | 195. (D) | 196. (A) | 197. (A) | 198. (A) | 199. (B) | 200. (B) |

www.recruitmentguru.com